கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2012/2013

(மார்ச்/ஏப்ரல் 2015)

## TLS 2123 தொல்காப்பியம்: எழுத்ததிகாரம் & சொல்லதிகாரம்

நேரம்: 03 மணித்தியாலங்கள்

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01. பின்வரும் நூற்பாக்களுக்கு பொருள் எழுதுக.

அ) அவைதாம்
குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன

ஆ) எகர ஒகரத்து இயற்கையுமற்றே

இ) மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்
தம்முன்தாம் வரூஉம் ர ழ வலங்கடையே

ஈ) வினையினும் பண்பினும்
நினையத் தோன்றும் ஆளென் இறுதி
ஆயா கும்மே விளிவயினான

உ) ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
அம்முப்பாற் சொல் உயர்திணையவ்வே

(05x05=25 புள்ளிகள்)

02. அ) எழுத்துக்களின் பொதுப் பிறப்புக் குறித்துத் தொல்காப்பியர் யாது கூறுகின்றார்? (05 புள்ளிகள்)

ஆ) தமிழில் மெய் எழுத்துக்கள் பிறக்கும் முறைமையினை தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. (20 புள்ளிகள்)

03. உயிரீற்றுப் புணர்ச்சி குறித்துத் தொல்காப்பியர் விளக்குவனவற்றை உதாரணங்களுடன் தெளிவுறுத்துக. (25 புள்ளிகள்)

04. அ) வினைச் சொற்களின் இயல்புகள் பற்றித் தொல்காப்பியர் கூறுவன யாவை? விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) பெயரெச்சம், வினையெச்சம் என்பன தொடர்பாகத் தமிழிலே பின்பற்றப்படுகின்ற மரபுகளைத் தொல்காப்பியர் தொகுத்துக் கூறுமாற்றைச் சூத்திரங்களின் துணையோடு விபரிக்குக. (15 புள்ளிகள்)

05.அ) தொல்காப்பியர் ‘விளி’ என்பதற்குக் கூறும் இலக்கணம் யாது? (03 புள்ளிகள்)

ஆ) பெயர்ச்சொற்கள் ‘விளி’ ஏற்கும் முறை பற்றித் தொல்காப்பியர் கூறுவனவற்றை விளக்குக. (17 புள்ளிகள்)

இ) விளி கொள்ளாத பெயர்ச்சொற்கள் யாவை? சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குக்** குறிப்புரை எழுதுக.

அ) ஐம்பால்களை உணர்த்தும் சொற்கள்

ஆ) தொல்காப்பியர் கூறும் உயர்திணைப் பெயர்கள், அ∴றிணைப் பெயர்களின் வகைகள்

இ) எழுத்துப்போலி

ஈ) மொழி இறுதிநிலை எழுத்துக்கள் (12 ½ x2= 25 புள்ளிகள்)

**********************************************************************